MAY 2022 **P/ID 35318/PTL2H**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. இளிவரல் என்றால் என்ன?

2. இறை - பொருள் கூறுக.

3. நகுநயம் மறைத்தல் என்றால் என்ன?

4. கிழவோன் - பொருள் சுட்டுக.

5. தடுமாறு உவமம் என்பது யாது?

6. நந்து - பொருள் தருக.

7. களிறு என்பது யாது?

8. போத்து - எவற்றின் இளமைப் பெயர்?

9. முதல் நூல் என்பது யாது?

10. குற்றுகர நிரைபசைக்குச் சான்று தருக.

11. உரியசை குறித்து எழுதுக.

12. பண்ணத்தியின் இயல்பு யாது?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. தலைமக்களுக்குள் அமையத்தக்க பொருத்தங்கள் யாவை?

14. ஒப்பிடத்தக்க பொதுப் பண்புகளாக உவமையியல் கூறுவன யாவை?

15. 'கிழவி சொல்லின் அவளறி கிளவி' - விளக்குக.

16. மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும் - கருத்துரைக்க.

17. வஞ்சியுரிச் சீர் பற்றி நீவிர் அறிவன யாவை?

18. நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே - விளக்குக.

19. மந்திரம் குறித்துச் செய்யுளியல் கூறுவது யாது?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. எட்டே மெய்ப்பாடு - விளக்குக.

21. உள்ளுறை உவமம் பற்றி எழுதுக.

22. மரபியல் உயிரினங்களைப் பாகுபடுத்துமாற்றைப் பகர்க.

23. தூக்கு - விளக்குக.

24. செய்யுளியலால் அறியலாகும் இலக்கியக் கட்டமைப்பு முறையை ஆராய்க.

———————